## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மக்கள் வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.

வங்கி மற்றும் தொகுதியின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி மற்றும் தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கி மற்றும் தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த

நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ங்கி மற்றும் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கி மற்றும் தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கி மற்றும் தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க

ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் வங்கி மற்றும் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ➢ ரூபா 2,783 மில்லியன் தொகையான திரண்ட மீதி ஒரு வருடத்திற்கும் மேலாக தீர்க்கப்படாமல் நிலுவையாக இருந்தது. | 2022.11.14 இல் உள்ளவாறு ரூபா 2.783 பில்லியன் தொகையில் ரூபா 1.968 பில்லியன் தொகை ஏற்கனவே மூலதனமாக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய கால எல்லைகளுக்குள் நீண்டகால நிலுவையாக உள்ள தொங்கல் கணக்குகளை தீர்வு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. நீண்டகால நிலுவையாக உள்ள தொங்கல் கணக்கு மீதிகள் மீது பின்தொடர் |

| | | |
|---|---|---|
| | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| ➢ தரவுக் களஞ்சிய செயற்திட்டத்திற்காக ஜஸ்ற் இன் ரைமிற்கும் (PO 21458) Application rewrite நிகழ்ச்சித்திட்டத்திற்காக (PO 25629) இனோவா ஐரீ சிஸ்ரத்திறகும் மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 137.19 மில்லியன் மற்றும் ரூபா 47.03 மில்லியன் தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நட்டங்களிற்காக முழுமையாக வழங்கப்பட்டது. | வேலை உடன்படிக்கையின் நோக்கெல்லையின் பிரகாரம் தரவுக் களஞ்சிய செயற்திட்டத்திற்காக ரூபா 168.66 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு ஜஸ்ட் இன் ரைமுக்கு (PO21458) வழங்கப்பட்டது, மேலும் உரிமம் காலாவதியாகும் போது செயற்திட்டம் நிறுத்தப்பட்டது, எனவே 2021 ஆம் ஆண்டின் இறுதியில் நட்டங்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டது.<br><br>இனோவா ஐரீ சிஸ்ரம்ஸ் (PO25629) இற்கான முற்பணக் கொடுப்பனவு<br><br>Application Re-write நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 47.03 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு இனோவா ஐரீ சிஸ்ரம்ஸ் (PO25629) இற்கு மேற்கொள்ளப்பட்டது.<br>வழங்கும்போது சில பகுதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்து. தற்போது Re-Write செயற்திட்டத்தின் கீழ் அனைத்து முறைமைகளும் நேரடி செயற்பாடுகளில் உள்ளதுடன் உள்ளக அபிவிருத்தி குழுவின் (In-house development team) ஈடுபாட்டுடன் சில அபிவிருத்திகள் செய்யப்பட்டுள்ளன.<br>உடன்படிக்கையின் பிரகாரம் இனோவா-ஐரீ மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி சேவைகளுக்கு மாதாந்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது.<br>முறைமைகள் தற்போது தேவையான முன்னேற்றங்களுடன் நேரடிச் செயற்பாட்டில் இருப்பதால் செய்யப்பட்ட ஏற்பாட்டிற்கு ஒரு சாத்தியமான மாற்றத்தை மேற்கொள்ள முடியும். | பொருளாதார தீர்மானங்களில் அதிக அக்கறை காட்ட வேண்டியதுடன் அத்தகைய முடிவுகளை எடுப்பதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ➢ டிஜிட்டல் மயமாக்கல் செயற்திட்டத்தின் செலவினமாக ஏற்பட்ட ரூபா 84.63 மில்லியனால் பரீட்சை மீதியை விட ஜிஎல் கணக்கு மீதி அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் டிஜிட்டல் மயமாக்கல் செயற்திட்டம் தொடர்பாக இலங்கை ரூபா 84.63 மில்லியன் செலுத்தப்பட்டது. | செலவினம் ஏற்பட்டதை நிரூபிக்கும் துணை ஆவணமாக சபை அனுமதியை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே நிகழ்வை நிரூபிக்கக்கூடிய அனைத்து செலவினங்களையும் மேற்கொள்ள வேண்டும். மேலும் இந்த செலவினத்திற்கான மூல காரணம் குறித்து முறையான விசாரணை நடாத்தப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பீஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தியின் பிரகாரம் பணியாளர்களுக்குப் பயன்படுத்தப்படும் உழைக்கும் போதே செலுத்தும் வரியைக் கழிப்பதற்கும், அதை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் பணிப்பாளர் சபை மற்றும் பொது நிறுவனங்களின் உயர் முகாமைத்துவம் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அரச வங்கிகளுக்கும் உரிய தொழிற்சங்கங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்கப்படாமல் ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை வங்கியால் செலுத்த அறிவுறுத்துகிறது. அதன் அடிப்படையில், 2021/22 மதிப்பீட்டு ஆண்டிற்காக 2021/12/31 இல் உள்ளவாறான ஊழியர்களின் உழைப்புகளில் இருந்து கழிக்காமல் வங்கியின் நிதியில் இருந்து ஊழியர்களின் சார்பாக ரூபா 56.86 மில்லியன் தொகையை உழைக்கும் போதே செலுத்தும் வரியாக வங்கி செலுத்தியுள்ளது. | பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட முயல்கிறோம்.<br><br>(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பகுதி II மற்றும் அனைத்து திறைசேரி மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளிலிருந்து மக்கள் வங்கிக்கு விலக்கு அளிக்கும் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம்.<br><br>(ஆ) 2021 முதல் 2023 வரை மற்றும் 1991 முதல் 1993 வரையிலான காலப்பகுதி(கள்)/ சம்பளச் சுழற்சி தொடர்பாக வங்கிக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட கூட்டு உடன்படிக்கை(கள்) இன் பிரகாரம்.<br><br>- இந்தச் சூழலில், பின்வருவனவற்றைச் சுட்டிக்காட்ட முயல்கிறோம்.<br><br>(அ) 6 மற்றும் 14 ஆம் உட்பிரிவு(கள்) இல் முறையே குறிப்பிட்ட கவனத்தை ஈர்க்கிறோம், இது சுய விளக்கமாகும். சம்பளங்கள் தொடர்பாக உழைக்கும் போதே செலுத்தும் வரி தொடர்பான இறுதிப் பொறுப்பை இது அமைக்கிறது. | பீஈடி சுற்றறிக்கை பின்பற்றப்பட வேண்டும். |

(ஆ) குறித்த இரண்டு (2) உடன்படிக்கைகளில் சுய சான்றாக இந்த நடைமுறை முப்பது (30) ஆண்டுகளாக உள்ளது.

(இ) இதேபோன்ற கூட்டு உடன்படிக்கை(கள்) இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிக்கும் பொருந்தும். எதிர்காலத்தில் ஏதேனும் சந்தேகங்களைத் தவிர்ப்பதற்கு, தொடர்புடைய அனைத்து பேச்சுவார்த்தைகளும் ஒருங்கிணைப்பில் மேற்கொள்ளப்படுகின்றன.

(ஈ) இதே சலுகை அனைத்து வங்கி ஊழியர்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 30,386.6 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 21,226.7 மில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,159.9 மில்லியன் தொகையான அல்லது 43.15 சதவீத முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. தேறிய வட்டி வருமானம், தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் மற்றும் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா'000) | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 17,612,485 | 9.8 | மேலதிகப்பற்றுக்கள், காலக் கடன்கள், வெளிநாட்டு நாணய பணச் சந்தை வேலைவாய்ப்புக்கள் குறுங்காலக் கடன் இறக்குமதி கடன்களின் சராசரி மீதிகளில் அதிகரிப்பு |
| வட்டி செலவினம் | (3,914,573) | 3.3 | வட்டி தாங்கும் பொறுப்புக்களின் சராசரி மீதி அதிகரித்த போதிலும் விகிதக் குறைப்புக்களின் |

| | | | |
|---|---|---|---|
| | | | காரணமாக நிதிக் கிரயத்தில் வீழ்ச்சி |
| ஏனைய செலவினங்கள் | 1,941,843 | 12.7 | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது விளம்பரம் மற்றும் வணிக ஊக்குவிப்பு, வைப்புக் காப்புறுதி கட்டுப்பணம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பவற்றில் அதிகரிப்பு |
| நட்டக்கழிவு கட்டணம் | 2,905,646 | 25.1 | ISBs இல் கடன்கள் மற்றும் முற்பணங்ள் மற்றும் PD ஆகியன தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேலதிக ஏற்பாடுகள் 30 சதவீதம் வரை அதிகரித்தன. |
| பெறுமதி சேர் வரி (வற்), தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் நிதிச் சேவைகள் மீதான கடன் மீள்கொடுப்பனவு விதிப்பனவு (டிஆர்எல்) | 3,010,444 | 78.2 | இலாபங்கள் மற்றும் சம்பளங்களில் அதிகரிப்பு |
| ஆளணி செலவினங்கள் | 3,049,568 | 15.5 | 2021-2023 கூட்டு உடன்படிக்கையின் பிரகாரம் சம்பள உயர்வு மற்றும் ஊக்குவிப்பு படி அதிகரிப்பு (2021 இல் 2.5 மாதங்கள் மற்றும் 2020 இல் 1 மாதம்) |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட துறைவிகிதங்களுடனான ஒப்பீட்டுடன் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **துறை விகிதம்** | **வங்கி** | |
|---|---|---|---|
| | | **2021** | **2020** |
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 13.8 | 19.9 | 14.3 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.6 | 1.3 | 1 |
| வட்டி எல்லை | 3.3 | 3.4 | 2.9 |
| **சொத்து தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.3 | 3.2 | 3.3 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |

| | | | |
|---|---|---|---|
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 8.5%) | 13.2 | 12.6 | 9.5 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 14%) | 16.7 | 17.8 | 15.5 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்து விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 20%) | 30.9 | 23.52 | 25.61 |
| திரவத்தன்மை மேவுகை விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 100%) | | ரூபா – 155.83<br>அனைத்து நாணயம் – 105.71 | ரூபா - 166.82<br>அனைத்து நாணயம் - 111.55 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **3.1.1 தரவுக் களஞ்சியம் மற்றும் வணிக நுண்ணறிவு முறைமை செயற்திட்டம்**<br>வங்கி 2011 ஆம் ஆண்டில் தரவுக் களஞ்சியம் மற்றும் வணிக நுண்ணறிவு முறைமையை (DWH & BI) அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானித்தது. வங்கி விற்பனையாளர்களிடமிருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துதலை (EOI) கோரி முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை (RFPs) தெரிவுசெய்யப்பட்ட விற்பனையாளர்களிடமிருந்து கோரியிருந்த போதிலும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ரூபா 250,539,918 ஆரம்ப கிரயத்தில் ஜஸ்ட் இன் ரைம் (JIT) ஐ தெரிவுசெய்யும் தீர்மானத்தை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளுக்கான ரூபா 168,850,063 பராமரிப்பு கிரயம் உட்பட ரூபா 419,389,981 கூட்டுமொத்த கிரயத்திற்காக வங்கி 2015 நவம்பர் 02 இல் JIT உடன் உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தது. ஒப்பந்தத்தின் இறுதி விலை அட்டவணையின் பிரகாரம் ஐ.அ.டொலர் மற்றும் இலங்கை ரூபா ஆகிய இரு நாணயங்களிலும் வங்கி விலையை கோரியிருந்த போதிலும் ஐ.அ.டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்ததால் இலங்கை ரூபாவில் இணங்கப்பட்ட தொகையை விட ரூபா 36,462,590 தொகையை அதிகமாக வங்கி செலுத்த வேண்டியிருந்தது. மேலும், இந்த | கருத்துரைகள் குறித்துக்கொள்ளப்பட்டது.<br><br>சாத்தியவள ஆய்வு செய்யப்படாத போதிலும் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் மொரட்டுவை பல்கலைக்கழகம் அடங்கிய வெளி ஆலோசகர் மற்றும் தொழில்நுட்பக் குழு உறுப்பினர்களின் பங்கேற்புடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் எதிர்கால அணுகுமுறையாக தரவுக் களஞ்சிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.<br><br>உடன்படிக்கையின் போது 1 ஐ.அ.டொலர் = ரூபா 133 ஆகும்., அது தற்போது ஏறத்தாழ 1 ஐ.அ.டொலர் = ரூபா 360 ஆக சுமார் 3 மடங்கு அதிகரித்துள்ளது<br><br>காலப்போக்கில், தேவைகள் மாறி புதிய தேவைகள் எழுந்தன. தவறான வெளியீடு வங்கிக்கு மதிப்பு இல்லை என்பதால் ரூபா 1,467,787.86 பெறுமதியான மாற்றக் கோரிக்கைகள், தற்போது தேவைப்படும் புதிய தேவைகள்/ மாற்றங்களுக்காக | வங்கி இந்த முறைமை மீது செலவு செய்திருந்த போதிலும் தற்போது வங்கி அதை செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதில்லை. வங்கி பொதுப் பணத்தில் செயற்படுவதால், வங்கியின் முகாமைத்துவ தீர்மானங்கள் விதிவிலக்குகள் இல்லாமல் வங்கிக்கு அதிக சிக்கனமாக இருக்க வேண்டும். |

மாற்றங்கள் ஆரம்ப கட்டத்தில் இனங்காணப்படாததால், இணங்கப்பட்ட கிரயத்திற்கு மேலதிகமாக ரூபா 1,467,787.86 தொகை முறைமைக்கான மாற்ற கோரிக்கைக்காக செலுத்தப்பட்டது. 2022 மே 30 இல் உள்ளவாறு வங்கி ரூபா 405,757,212 (வரிக்குப் பின்னர்) தொகையை செலுத்தியிருந்த போதிலும் தரவுக் களஞ்சிய முறைமையை பயன்படுத்தி அவற்றின் சொந்த வடிவங்களுக்கான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு பதிலாக தரவு சேகரிப்புக்கான மாற்று முறைகளைப் பயன்படுத்தி மேம்படுத்தப்பட்ட முறைமைகளின் மாற்றங்களுக்கு ஏற்ப புதுப்பிக்கப்படாததாலும் உரிமம் காலாவதியாகிவிட்டதாலும் செயற்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டதுடன் செயற்பாட்டில் இருக்கவில்லை.

செலுத்தப்பட்டது, ஜஸ்ட் இன் ரைம் ரெக்னோலஜிஸ் (JITT) மிகக் குறைந்த கூறுவிலையுடன் ஒரு மதிப்பீட்டின் மூலம் தெரிவுசெய்யப்பட்டதுடன் தேவையான கட்டாய/ விரும்பத்தக்க தொகுதி சமர்ப்பிப்பு வழங்குநராக உள்ளது.

PB முகாமைத்துவம், விற்பனையாளருடன் கலந்துரையாடல் மற்றும் விலைப் பேச்சுவார்த்தைகள் மற்றும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு அடுத்த காலப்பகுதிக்கான உரிமத்தை புதுப்பித்தலுடன் சாதகமான உடன்படிக்கையில் நுழைவதற்கு முன்முயற்சியான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. எனினும், விற்பனையாளரிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவு வங்கியால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, எனவே உரிமம் காலாவதியான பின்னர் புதுப்பிக்கப்படாமல் செயற்திட்டம் நிறுத்தப்பட்டது.

தரவுக் களஞ்சியத்தின் இந்த இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்காக, பல தகவல் முறைமைகளில் இருந்து தரவை ஒருங்கிணைப்பதற்கும் ஒரு புதிய S/W கருவி மூலம் சொந்த அறிக்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு அறைகளை உருவாக்குவதற்கு உள்ளக தீர்வுடன் முன்னேறுவதற்கு வங்கி தீர்மானித்திருந்தது. தெரிவுசெய்யப்பட்ட S/W tool 'Tableau' மதிப்பீடு செயலில் உள்ளது. தரவுக் களஞ்சிய தீர்வுக்காகப் பயன்படுத்தப்படும்

தெரிவுசெய்யப்பட்ட சேவையகங்களின் எண்ணிக்கையை வங்கியின் நன்மைக்காக ஒரு புதிய சேவை நிலை உடன்படிக்கையுடன் (SLA) இந்தத் தீர்வின் கீழ் மீண்டும் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டது.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

**கணக்காய்வு விடயம்**

| நட்டம் நிகழ்வு | 2021 | | | 2020 | | |
|---|---|---|---|---|---|---|
| | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா மில். | மொத்த பெறுமதியின் சதவீதம் | நிகழ்வுகளின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா மில். | மொத்த பெறுமதியின் சதவீதம் |
| உள்ளக மோசடிகள் | 4 | 52.64 | 23.48 | 1 | 0.43 | 0.06 |
| வெளியக மோசடிகள் | 100 | 121.07 | 54 | 181 | 735.50 | 95.50 |
| வாடிக்கையாளர், உற்பத்திப் பொருள் மற்றும் வணிக நடைமுறைகள் | 0 | 0 | 0 | 1 | 23.01 | 2.99 |
| பௌதீக சொத்துக்களுக்கான சேதம் | 6 | 0.37 | 0.17 | 4 | 0.51 | 0.07 |
| வணிக இடையூறுகள் மற்றும் முறைமை தோல்விகள் | 4 | 0.35 | 0.16 | 7 | 0.23 | 0.03 |
| செயற்படுத்தல், விநியோகம் மற்றும் செயன்முறை முகாமைத்துவம் | 103 | 49.79 | 22.21 | 96 | 10.50 | 1.36 |
| **மொத்தம்** | **217** | **224.22** | **100** | **290** | **770.18** | **100** |

- 2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த நட்டங்கள் ரூபா 224.22 மில்லியனாக இருந்ததுடன் இதில் மூன்று பெரிய மோசடிகள் உள்ளடங்குகின்றதுடன் ”வெளியக மோசடிகள்” மற்றும் ”உள்ளக மோசடிகள்” ஆகியவற்றின் கீழ் முறையே ரூபா 40 மில்லியன், ரூபா 50.3 மில்லியன் மற்றும் ரூபா 50.23 மில்லியன் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ((MPCS)- மாத்தளை தொடர்பான நிதி முறைகேடுகளுடன் தொடர்புடைய ரூபா 40 மில்லியன் தொகையான ஒரு வெளியக மோசடி மேற்கூறியவற்றில் உள்ளடங்கியுள்ளது. வாடிக்கையாளரின் கணக்கிற்கு செலவு வைத்தல் அல்லது ”கணக்கு பணம் பெறுபவர்” செலுத்துதல் கட்டளையை வழங்குதல் மூலம் மாத்திரமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட

**முகாமைத்துவ கருத்துரை**

முன்னிலைப்படுத்தப்பட்ட சம்பவங்களுக்கான மூல-காரண பகுப்பாய்வுகள் நடாத்தப்பட்டு, எதிர்காலத்தில் இதுபோன்ற நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்கான/ குறைப்பதற்கான பரிந்துரைகள் செயற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் ஆழமாக கலந்துரையாடப்பட்டன.

கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன/ தொடங்கப்பட்டுள்ளன.

| சம்பவம் | எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரங்கள் |
|---|---|
| MPCS – மாத்தளை | விசாரணை முடிவடைந்து 07 பதவியணி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று தீர்மானங்கள் சுமத்தப்பட்டுள்ளன. |
| விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகம் - பேராதனைப் பல்கலைக்கழகம் | விசாரணை முடிவடைந்து 08 பதவியணி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று தீர்மானங்கள் சுமத்தப்பட்டுள்ளன. கோவை இல. 8281/138/18 இன் கீழ் - விசாரணை முடிவடைந்தது 06 பதவியணி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று தீர்மானங்கள் சுமத்தப்பட்டுள்ளன. |

**பரிந்துரை**

உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிற நிலையான வைப்புக்கள் தொடர்பான பொதுவான அறிவுறுத்தல்களுக்கு முரணாக மேற்படி சங்கத்துடன் தொடர்புடைய 14 நிலையான வைப்புக்கள் மூடப்பட்டு உரிய தொகை காசாக செலுத்தப்பட்டிருந்தது. இந்த சம்பவம் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்டது.

- மற்றொரு ரூபா 50 மில்லியன் தொகையான வெளியக மோசடி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிலையான வைப்புக் கணக்கிலிருந்து பணத்தை மோசடியான முறையில் மீளப்பெற்றதுடன் தொடர்புபட்டதாகும். வாடிக்கையாளரின் கணக்கிற்கு செலவு வைத்தல் அல்லது "கணக்கு பணம் பெறுபவர்" செலுத்துதல் கட்டளையை வழங்குதல் மூலம் மாத்திரமே கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டுகிற நிலையான வைப்புக்கள் தொடர்பான பொதுவான அறிவுறுத்தல்களுக்கு முரணாக 14 எண்ணிக்கையிலான நிலையான வைப்புக்கள் மூடப்பட்டு, தொடர்புடைய தொகைகள் காசாக செலுத்தப்பட்டிருந்தன.
- ரூபா 50.23 மில்லியன் தொகையான பெரிய உள்ளக மோசடியொன்று அடகு வைத்தல் உத்தியோகத்தர் போலி வாடிக்கையாளர்களை அடகு வைப்பு முறைமையில் உருவாக்கியதால் அடகு வைப்பு முற்பணங்களில் இருந்து இனங்காணப்பட்டது.

கொட்டாவ 16 வரைவு குற்றப்பத்திரிகைகளுக்கு சட்ட பிரிவிடமிருந்து அங்கீகாரத்திற்காக காத்திருக்கப்படுகிறது. 7 நிகழ்ச்சிக்கு காரணமான கடிதங்கள் வழங்கப்பட்டு பதிலுக்காக காத்திருக்கின்றன. நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளது. முக்கிய குற்றவாளிகள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டு தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்கூறியவற்றிற்கு மேலதிகமாக ஒவ்வொரு பிராந்தியத்தின் பிராந்திய இடர் உத்தியோகத்தர் பிராந்தியத்தின் கிளைகளில் மேற்கொள்ளப்படும் கால ரீதியான இடர் மதிப்பீடுகளின் போது விதிக்கப்பட்ட உள்ளக கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்கும் அளவை மதிப்பிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

#### 3.3.1 நிர்மாண செயற்திட்டங்களில் தாமதங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 3.3.1.1 மாதிரி மதிப்பாய்வில், நிர்மாண செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க தாமதங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டன. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது. | தாமதங்கள் குறைக்கப்பட வேண்டும். |

| கிளை பெயர் | ஒப்பந்த கோவை இலக்கம் | கிரய மதிப்பீடு (ரூபா) (வரிக்கு முன்னர்) | சலுகை திகதி | உரிய திகதி | 2021/12/31 இல் உள்ளவாறான செயன்முன்னேற்றம் |
|---|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 2016/20 | 261,765,370 | 29/04/2016 | 15/02/2018 | 50% பூர்த்தி செய்யப்பட்டது |
| யாழ்ப்பாணம் | 50/2017 | 784,713,362 | 09/05/2017 | 10/06/2019 | பூர்த்தி செய்யப்படவில்லை. |
| கேகாலை | PLPDL ஆல் கேள்வி கோரப்பட்டது | 317,682,298 | 28/05/2019 | 27/01/2022 | 32% பூர்த்தி செய்யப்பட்டது |
| மாத்தளை | PLPDL ஆல் கேள்வி கோரப்பட்டது | 330,813,315 | 8/10/2020 | 24/01/2022 | 40% பூர்த்தி செய்யப்பட்டது |

3.3.1.2 செயற்திட்டங்களின் மாதிரி மதிப்பாய்வில், செயற்திட்டச் சலுகை திகதிக்கும் நிர்மாண தொடக்கத் திகதிக்கும் இடையே குறிப்பிடத்தக்க தாமதங்கள் பின்வருமாறு அவதானிக்கப்படடன.

கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது.

| கிளை பெயர் | ஒப்பந்த கோவை இலக்கம் | கிரய மதிப்பீடு (ரூபா) | சலுகை திகதி | நிர்மாணம் தொடங்கிய திகதி | தொடங்குவதில் தாமதமான நாட்கள் |
|---|---|---|---|---|---|
| தலைமை அலுவலகம் | 2016/20 | 261,765,370 | 29/04/2016 | 16/02/2017 | 293 |
| யாழ்ப்பாணம் | ஒப்பந்தம் 50/2017 | 784,713,362 | 09/05/2017 | 07/12/2017 | 212 |
| கேகாலை | PLPDL ஆல் கோரப்பட்ட கேள்வி | 317,682,298 | 28/05/2019 | 26/10/2020 | 517 |
| மாத்தளை | PLPDL ஆல் கோரப்பட்ட கேள்வி | 330,813,315 | 21/05/2019 | 22/10/2020 | 520 |
| முல்லைத்தீவு | PLPDL ஆல் கோரப்பட்ட கேள்வி | 119,136,308 | 09/10/2017 | 08/03/2018 | 16 |

3.3.1.3 2006 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் வெளியிடப்பட்ட அரசாங்க பெறுகை வழிகாட்டல்கள், அரசாங்க பெறுகை செயன்முறையின் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கும், தாமதங்களைக் குறைப்பதற்கும், அதிக நிதி ரீதியாக சாதகமான மற்றும் உயர்தர வேலை மற்றும் வழங்கல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், வங்கி நிதிச் சட்டத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டு குறித்த வழிகாட்டல்களை வங்கி பின்பற்றியிருக்காததுடன் வங்கியின் சொந்த வேலை பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பெறுகை முகவர் பின்பற்ற வேண்டிய வங்கிக்கு சொந்தமான நடைமுறையை உருவாக்கத் தவறியிருந்தது. அதன் பிரகாரம் 2017 முதல் 2021 வரையிலான காலப்பகுதியின் போது 11 பணிகள் தொடர்பாக பணிகளின் மதிப்பிடப்பட்ட 7,092 மில்லியன் பெறுமதி குறிப்பிட்ட பெறுகை வழிகாட்டலை பின்பற்றாமல் செய்யப்பட்டன.

வங்கி 2013 ஆம் ஆண்டில் ரூபா 257.9 மில்லியன் பெறுமதியான காணியை யாழ்ப்பாணத்தில் உத்தேசிக்கப்பட்ட மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளையை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்து 04

வங்கியானது தேசிய பெறுகை முகவராண்மை வழிகாட்டல்கள் (NPA) மற்றும் செயற்திட்டங்களின் பெறுகைக்காக பல ஆண்டுகளாக CIDA ஆல் உருவாக்கப்பட்ட நிலையான கேள்வி ஆவணங்களைப் பயன்படுத்துகிறது. மேலும் வங்கிக்குச் சொந்தமான பணிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளுக்கான பெறுகை கொள்கை பின்னர் உருவாக்கப்பட்டு, 2022 யூன் மாதத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றது. எனவே,

வங்கி NPA வழிகாட்டல்களைப் பின்பற்றியிருந்ததென முகாமைத்துவக் கருத்து குறிப்பிட்ட போதிலும் NPA வழிகாட்டல்களுடன் பல இணக்கமின்மைகள் காணப்பட்டன. எனவே எதிர்காலத்தில், 2022 யூன் மாதத்தில் அங்கீகரிக்கப்பட்ட வேலைகள்

வருடங்களின் பின்னர் லிங்க் எஞ்ஜினியரிங் பிறைவேட் லிமிட்டட்டிற்கு 550 நாட்கள் தவணைக்காலத்துடன் ரூபா 597.2 மில்லியன் கிரயத்தில் முன்மொழியப்பட்ட நிர்மாணத்தை வழங்கியிருந்த போதிலும் 8 ஆண்டுகள் கடந்தும் வங்கி விரும்பிய நோக்கத்தை அடைந்துகொள்ளத் தவறியிருந்தது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டம் எதிர்பார்த்த திகதியில் பூர்த்தி செய்யப்படாததால், வங்கிக்கு ரூபா 13.12 மில்லியன் அலுவலக வாடகை மற்றும் பாதுகாப்பு செலவினங்களாக சிக்கனமின்றி ஏற்பட்டிருந்தன.

ஆலோசகர்களைத் தெரிவுசெய்து ஆட்சேர்ப்பு செய்தல் பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் செய்யப்பட்டிருக்காததுடன் பெறுகை பணிகள் வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை, ஆலோசனை நிறுவனம் (டிசைன் குஷரூப் பைவ் இன்டர்நேஷனல் (பிறைவேட்) லிமிட்டட்) ஆலோசனை பணிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னதாகவே பணிகளைத் தொடங்கியிருந்தமை இதற்கு சான்றளிக்கின்றது. இந்த செயற்திட்டத்தின் ஒப்பந்த நிர்வாகம் மற்றும் மேற்பார்வை கிரயம் ரூபா 26.5 மில்லியன் அல்லது மதிப்பிடப்பட்ட செயற்திட்ட கிரயத்தில் 4.5 சதவீதம் ஆகும். ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் பிரகாரம் ஒப்பந்ததாரர் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் பொறியியலாளர்கள் உட்பட 12 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை முழுநேர மற்றும் பகுதிநேர அடிப்படையில் செயற்திட்டத்தில் பணிக்கமர்த்த வேண்டும். நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பகுதியில் உள்ள பௌதீக குறைபாடுகள் மற்றும் ஒப்பந்த நிர்வாகத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, 12 உத்தியோகத்தர்கள் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் நியமிக்கப்பட்டார்களா, அவர்கள் முறையாக மேற்பார்வை செய்யப்பட்டார்களா என்பது சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

மேலும், இச் செயற்திட்டத்தின் நிர்மாணம் திட்டமிட்டதை விட அதிக காலதாமதத்தை காட்டுகின்றமை, வேலைத்தள இடையூறுகள், நாளாந்த பணியாளர்களின் குறைவான வருகை, பணியிடத்தில் அத்தியாவசிய மூலப்பொருட்கள் மற்றும் பொருட்கள் கிடைக்காதமை, மூலப்பொருள் மாதிரிகளின் தட்டுப்பாடு மற்றும் தொழில்நுட்ப சமர்ப்பிப்புகள், முன்னேற்ற அறிக்கைகளின் முறையற்ற சமர்ப்பிப்பு மற்றும் பட்டை விளக்கப்படங்களை (bar charts) முறையாக சமர்ப்பிக்க இயலாமை ஆகியன காரணமாக ஒப்பந்த உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவுசெய்தல், கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல், கேள்வியை மதிப்பீடு செய்தல், ஒப்பந்ததாரரைத் தெரிவுசெய்தல், ஒப்பந்தங்களை பூர்த்தி செய்தல், ஒப்பந்தப் பணிகளைச் செய்தல், அவற்றைக் கண்காணித்தல் மற்றும் ஆலோசனை நிறுவனங்களின் பொறுப்புக்களை நிறைவேற்றுதல் போன்றவற்றில் உள்ள குறைபாடுகள் இந்த ஒப்பந்தத்தின் முடிவுறுத்தலிற்கு தாக்கம் செலுத்திய முக்கிய காரணிகளாகும்.

வங்கி ரூபா 204.84 மில்லியன் கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 27 சதவீதத்தை செலவிட்டிருந்ததுடன் வெளிநாட்டு

வேலைகள் மற்றும் ஆலோசனை சேவைகளுக்காக வங்கிக்கு சொந்தமான பெறுகை கையேடு உருவாக்கப்படும் வரை சுட்டிக்காட்டப்பட்ட செயற்திட்டங்களிற்காக தேசிய பெறுகை முகவராண்மையால் உருவாக்கப்பட்ட தரமான பெறுகை நடைமுறையை வங்கி பின்பற்றியிருந்தது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம். முன்னர் குறிப்பிட்டது போல், யாழ்ப்பாணத்தில் முன்மொழியப்பட்ட RHO மற்றும் கிளை செயற்திட்டத்தின் நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்பட்டது, இதன் விளைவாக முதலில் வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் மோசமான செயற்பாட்டின் எதிர்பாராத சூழ்நிலை காரணமாக ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது, அத்துடன் 2020/2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை ஏற்பட்டது. இதன் விளைவாக மூலதனச் செலவின செயற்திட்டங்கள் குறைக்கப்பட்டன. ஒப்பந்த செயற்திட்ட ஆலோசகரின் பிரகாரம் ஒப்பந்ததாரர் தேவையான செயற்திட்ட மேற்பார்வை பணியாளர்களை வழங்கியிருந்த போதிலும், PLPDL மற்றும் வங்கி செயற்திட்ட நடவடிக்கைகளில் தொடர்ச்சியான தாமதம் மற்றும் நிர்மாணப் பணிகளில் உள்ள சில சிரமங்களைக் குறிப்பிட்டிருந்தன.

மற்றும் ஆலோசனை சேவைகளுக் கான சொந்த பெறுகை கொள்கைகைய வங்கி கடைபிடிக்க வேண்டும்.

நாணய பெறுமதி மாற்றம் மற்றும் மூலப்பொருள் விலைகள் அதிகரிப்பு ஆகியவற்றால் பூர்த்தி செய்யப்படாத பணிகளுக்காக ரூபா 659.08 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் ஆரம்பத்தில் ரூபா 634.62 மில்லியன் வரை திருத்தப்பட்டு மீண்டும் ரூபா 693.65 மில்லியன் வரை திருத்தப்பட்டது.

காலதாமதத்தை போக்குவதற்கும், பணியின் தரம் மற்றும் வேலைத்திறனை பேணுவதற்கும், செயற்திட்ட ஆலோசகர், PLPDL மற்றும் வங்கி ஒப்பந்ததாரருக்கு தொடர்ந்து அறிவுறுத்தியிருந்தன. எனினும் ஒப்பந்ததாரரின் பதில் அனைத்திலும் திருப்திகரமாக காணப்படவில்லை, இறுதியாக அவர்களின் மோசமான செயலாற்றலை கருத்தில் கொண்டு ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது. கணக்காய்வு கருத்துக்களில் குறிப்பிட்டுள்ளவாறு ஒப்பந்ததாரரின் மோசமான செயலாற்றல் காரணமாக ஒப்பந்தம் நிறுத்தப்பட்டவுடன், செயற்திட்ட ஆலோசகர் கேள்வி ஆவணத்தை தயாரித்ததுடன் செயற்திட்டத்தின் மிகுதி வேலைக்கான மதிப்பீட்டை பொறியியலாளர்கள் தயாரித்தனர். செயற்திட்டத்தின் மொத்த நோக்கெல்லையை உள்ளடக்கிய வெளிப்புற வேலைகள் மற்றும் சில தற்காலிகத் தொகை நடவடிக்கைகள் தொடர்பான மேலதிக பணியின் நோக்ககெல்லை உட்பட பணியின் மிகுதி நோக்கெல்லை மீண்டும் திருத்தப்பட்டது. மேலும், மூலப்பொருள், உழைப்பு, பொறி ஆகியவற்றின் விலையேற்றம் காரணமாக செயற்திட்டப் பணியின் மிகுதி நோக்கெல்லையை

| | | | |
|---|---|---|---|
| | | பூர்த்தி செய்வதற்காக ஈடுபடுத்தப்படும் மேலதிக கிரயம் ரூபா 59.72 மில்லியன் ஆரம்ப ஒப்பந்த பெறுமதியின் காசாக்கப்பட்ட செயலாற்றல் பிணைமுறியிலிருந்து கணிசமாக அறவிடப்பட முடியும். 2022 மே மாதத்தில் யாழ்ப்பாணத்தில் முன்மொழியப்பட்ட பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளைக் கட்டிடத்தின் மீதிப் பணிகளை பூர்த்தி செய்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது, அதன் பிரகாரம் 2022 யூன் மாதத்தில் M/S சங்கென் கென்ஸ்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டட்டிற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட பிராந்திய தலைமை அலுவலகம் மற்றும் கிளைக் கட்டிடத்தின் மிகுதி நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. | |

**3.4 கடன் நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ---------------------------- | ------------------------- | --------------- |
| 3.4.1 | வங்கி 2021 ஆம் ஆண்டில் ரூபா 778,056.37 மில்லியன் கூட்டுமொத்த கடன்களை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 12,239.40 மில்லியன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகைப்படுத்தலிற்கு மாற்றப்பட்டது. அச் செயற்பாடற்ற கடன்களில், ரூபா 1,015.83 மில்லியன் தொகையான கடன்களின் ஒரு தவணைப்பணமேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 987.89 மில்லியன் தொகையான கடனிலிருந்து ஏதேனும் மூலதனத் தவணைப்பணம் மற்றும் ரூபா 27.94 மில்லியன் தொகையான கடனிலிருந்து ஏதேனும் வட்டி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது. | செயற்பாடற்ற கடன் அறவீடுகள் குறித்து தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம். |
| 3.4.2 | வங்கியின் செயற்பாடற்ற (NP) விகிதம் கடந்த ஐந்து ஆண்டுகளில் பின்வருமாறு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. | கடந்த 05 ஆண்டுகளில் | செயற்பாடற்ற கடன் |

| ஆண்டு | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| **NP விகிதம் %** | 1.9 | 2.5 | 3.3 | 3.2 | 3.2 |

மொத்தக் கடன்களின் NP விகிதம் கணிசமாக அதிகரித்துள்ளது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது. 2017 - 2018 ஆம் ஆண்டில் சிறிதளவு அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தாக்கங்கள் காரணமாக கணிசமான அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும், நிலைமையைத் தடுக்கவும், இயல்பு நிலைக்குத் திரும்பவும் தீவிர அறவீட்டு முயற்சி தொடங்கப்பட்டது.

அறவீடுகள் குறித்து தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம்.

3.4.3 பதிவழிக்கப்பட்ட முற்பணங்களில் இருந்து அறவிடப்பட்ட தொகையுடன் 2017 முதல் 2021 வரை கடந்த ஐந்து ஆண்டுகளில் பதிவழிக்கப்பட்ட தொகைகளின் பகுப்பாய்வு, பின்வருமாறுள்ளது.

| ஆண்டு | பதிவழிக்கப்பட்ட தொகை (ரூபா. மில்) | அறவிடப்பட்ட தொகை (ரூபா. மில்) | பதிவழிக்கப்பட்ட தொகைக்கு எதிராக அறவிடப்பட்ட தொகையின் சதவீதம் |
|---|---|---|---|
| 2017 | 102.14 | 30.29 | 29.66% |
| 2018 | 42.35 | 25.96 | 61.30% |
| 2019 | 219.66 | 71.53 | 32.56% |
| 2020 | 195.70 | 13.57 | 6.93% |
| 2021 | 119 | 15.29 | 12.85% |
| Total | 750.85 | 156.64 | 20.86% |

கணக்குப் புத்தகங்களைச் சரியாகப் பிரதிபலிக்கும் நோக்கத்திற்காக, ஒவ்வொரு ஆண்டும் பொருந்தக்கூடிய, அறவிடப்பட முடியாத NP கடன்களுக்கான பதிவழிப்பு கொள்கையை வங்கி ஏற்றுக்கொண்டது. அத்தகைய பதிவழிப்பு முற்பணங்களை

கடன் அறவீடுகள் குறித்து தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம்.

அறவிடுவதற்கு சாத்தியமான ஒவ்வொரு அறவீட்டு நடவடிக்கைகளும் தொடரப்பட்டுள்ளன.

மேலும், பதிவழிக்கப்பட்ட கடன்களை அறவிடுதல் அறவீட்டப் பிரிவின் முக்கிய செயலாற்றல் குறிகாட்டியாக அமைக்கப்பட்டுள்ளதுடன் அறவீட்டு செயன்முறையின் செயற்திறனை உறுதிப்படுத்துவதற்காக மாதாந்த அடிப்படையில் நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது.

3.4.4 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக உள்ள முதல் 10 செயற்பாடற்ற கடன்களின் (NPLs) மொத்த நிலுவையானது ரூபா 28,658.73 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 25,083.04 மில்லியன் வட்டி உள்ளடங்கலாக ரூபா 53,741.75 மில்லியனாகும், இது மொத்த NPLs மற்றும் முற்பணத்தில் 47.8 சதவீதத்தை பிரதிபலிக்கிறது. அதில் ரூபா 30,627 மில்லியன் அல்லது மேற்படி முன்பணங்களில் 51.1 சதவீதம் எந்தப் பிணைகளையும் கொண்டிருக்காததுடன் ரூபா 3,182 மில்லியன் அல்லது 5.31 சதவீதம் மேற்படி முற்பணங்களில் போதுமான பிணைகளை கொண்டிருக்கவில்லை.

கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது.

கடன் அறவீடுகள் குறித்து தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம்.

| | வாடிக்கையாளரின் பெயர் | மூலதன மீதி ரூபா மில்லியன் | வட்டி மீதி ரூபா மில்லியன் | மொத்த மீதி ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|
| 01 | கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் | 5,239.64 | 203.55 | 5,443.19 |
| 02 | CML குழுமம் | 3,472.54 | 1,555.51 | 5,028.05 |
| 03 | த கிரான்ட் மவுன்ரெய்ன் ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டட் | 3,450.64 | 234.67 | 3,685.31 |
| 04 | டபிள்யூ எம் மென்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட் | 3,136.60 | 106.15 | 3,242.75 |
| 05 | யசோதா குழுமம் | 3,040.41 | 21,731.13 | 24,771.54 |
| 06 | SREI இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட் | 3,011.25 | 162.26 | 3,173.51 |

| | | | | |
|---|---|---|---|---|
| 07 | மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 2,564.71 | 1.55 | 2,566.26 |
| 08 | குரவீ இன்ரநெஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | 1,907.13 | 614.09 | 2,521.22 |
| 09 | தயா அப்பரல் குழுமம் | 1,460.24 | 407.36 | 1,867.60 |
| 10 | நவலோகா குழுமம் | 1,375.57 | 66.75 | 1,442.32 |
| | **மொத்தம்** | **28,658.73** | **25,083.02** | **53,741.75** |

3.4.5 கடந்த 5 ஆண்டுகளாகச் செயற்பாடற்ற முதல் 10 கடன் வாடிக்கையாளர்கள் மற்றும் மீதிகளின் இயக்கம் பற்றிய பகுப்பாய்வு பின்வருமாறுள்ளது.

**ரூபா. மில்லியன்**

| **வாடிக்கையாளரின் பெயர்** | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|---|---|
| யசோதா குழுமம் | 21,635.8 | 22,416.7 | 23,197.6 | 23,980.6 | 24,771.54 |
| CML MTD குழுமம் | | 2,746.6 | 4,041.3 | 4,680 | 5,028.05 |
| மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | | 2,578.6 | 2,868.3 | 2,502 | 2,566.26 |
| டபிள்யூ எம் மென்டிஸ் அன்ட கம்பனி லிமிட்டட் | | | 2,674.6 | 3,875.7 | 3,242.75 |
| குரவீ இன்ரநெஷனல் (பிறைவேட்) லிமிட்டட் | | | 1,926.6 | 2,178.8 | 2,521.21 |
| தயா அப்பரல் குழுமம் | | | 785.5 | 1,943.2 | 1,867.60 |
| நவலோகா குழுமம் | | | 570.28 | 1,699.2 | 1,442.33 |
| குட் பெலோஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,387.9 | 1,704.9 | 1,742.6 | 1,905.2 | |
| றீகன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 1,636.3 | 2,025.3 | 1,937.5 | | |
| கிராலைன் எக்ஸ்பிறஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 4,609.3 | 4,714.6 | | | |
| த கிரான்ட் மவுன்ரெய்ன் ஹோட்டல் (பிறைவேட்) லிமிட்டட் | | 447.2 | | 3,563.9 | 3,685.31 |
| சிட்டி கென்ஸ்ட்ரக்ஷன் கென்ட்ரக்டேர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 973.1 | 861.3 | | 1,036.4 | |
| ஈ டபிள்யூ இன்போர்மேஷன் சிஸ்டம்ஸ் லிமிட்டட் | 1,022.4 | 1,122.1 | | | |
| ருசிருமல் (பிறைவேட்) லிமிட்டட் | 431.5 | | | | |
| றுஹுணு | 323.5 | | | | |

2017 - 2021 காலப்பகுதியில் முதல் 10 NPL மீதிகள் முக்கியமாக வெளிநாட்டு நாணய மதிப்பின் காரணமாக அதிகரித்துள்ளன. CWE, CML MTD குழுமம், மிஹின் லங்கா, தயா அப்பரல் குழுமம், நவலோகா குழுமம் ஆகியவற்றால் பெறப்பட்ட மூலதனக் கடனின் ஒரு பகுதி, திரண்ட வட்டியுடன் இந்தக் காலப்பகுதியில் அறவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள NP கடன்களை அறவிடுவதற்கு தீவிரமான அறவீட்டு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

கடன் அறவீடுகள் குறித்து தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டெவலொப்மென்ட் கென்ரக்டோர்ஸ் அன்ட் எஞ்சினியோர்ஸ் | | | | | |
| கொட்டகல பிளான்டேஷன் | 271.9 | | | | |
| ரெக் இன்போர்மேஷன் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 162.7 | | | | |
| லங்கா சிலோன் பிஎல்சி | | 683.4 | | | |
| லங்கெம் சிலோன் பிஎல்சி | | | 851.6 | | |
| கூட்டுறவு மொத்த விற்பளவு தாபனம் | | | | | 5,443.19 |
| SREI இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட் | | | | | 3,173.51 |
| **மொத்தம்** | **32,454.4** | **39,300.7** | **40,595.7** | **47,365.0** | **54,741.75** |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதல் 10 NPL அதிகரிப்பு (தொகைகள்) | | 6,846.32 | 1,295.04 | 6,769.30 | 7,156.21 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது முதல் 10 NPL அதிகரிப்பு (%) | | 21.1% | 3.3% | 16.7% | 15.1% |

- 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2021 அளவில் முதல் 10 NPL மீதி 68.67 சதவீதம் அல்லது ரூபா 22,287.35 மில்லியனால் அதிகரித்தது.

- மேற்படி பகுப்பாய்வின் பிரகாரம் யசோதா குழுமம் கடந்த ஐந்தாண்டுகளில் முதல் 10 செயற்பாடற்ற கடன்பெறுபவர்களில் தொடர்ந்து நீடிக்கிறது. CML MTD குழுமம், மிஹின் லங்காக (பிறைவேட்) லிமிட்டட், டபிள்யூ. எம். மெண்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட், குரவீ இன்ரநெஷனல் (பிறைவேட்) லிமிட்டட், தயா அப்பரல் குழுமம் மற்றும் நவலோகா குழுமம் ஆகியன கடந்த மூன்று வருடங்களாக முதல் 10 செயற்பாடற்ற கடன்களில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனவு தாபனம் (CWE) மற்றும் SREI இக்யூப்மென்ட் பினான்ஸ் லிமிட்டட் ஆகியன 2021 ஆம் ஆண்டின் போது முதல் 10 செயற்படாத கடன் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 3.4.6 | <u>அரசாங்க வெளிப்பாடு - கடந்த ஐந்து வருட பொழிப்பு</u><br>கடந்த ஐந்தாண்டுகளில் அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்குச் (SOEs) சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி கணிசமாக அதிகரித்துள்ளது. 2021 ஆம் ஆண்டளவில், SOEs இற்குச் சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்களின் மொத்த நிலுவை மீதி 2017 ஆம் | குறித்துக் கொள்ளப்பட்டது. | சரியான வரம்புகளைப் பேணுவதன் மூலம் SOEs இன் கடன் மீதிகள் |

ஆண்டுடன் ஒப்பிடும் போது 165% அல்லது ரூபா 584,107 மில்லியனால் அதிகரித்துள்ளது. 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் வருடாந்த வளர்ச்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 56%, 9.11%, 40.55% மற்றும் 10.96% ஆகும். 2017 ஆம் ஆண்டில், SOEs இன் மொத்த நிலுவை மீதி மொத்த கடன் மற்றும் முற்பணத்தில் இருந்து 32.89 சதவீதமாகவும், வங்கியின் மொத்த சொத்துக்களில் இருந்து 24.08 சதவீதமாகவும் இருந்தது. இந்த சதவீதங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்தக் கடன் மற்றும் முற்பணங்களில் இருந்து 48.39 சதவீதமாகவும், மொத்த சொத்துக்களில் இருந்து 35.40 சதவீதமாகவும் வேகமாக அதிகரித்துள்ளன. வங்கியின் மொத்த சொத்து அடிப்படை 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,647,641 மில்லியன் வரை அதிகரித்த போதிலும் SOEs இற்கான "கடன்கள் மற்றும் முற்பணங்கள்" மற்றும் "அரசாங்கத்திடமிருந்தான முதலீடு மற்றும் பெறவேண்டியவை'' ஆகியவற்றை முறையே 35.40 சதவீதம் மற்றும் 25.39 சதவீதம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அதன் பிரகாரம் வங்கியின் சொத்துக்கள் மீதான அரசாங்கத்தின் மொத்த வெளிப்பாடுகள் ஏறத்தாழ 60.79 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. வங்கியால் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை (கடன்கள், வைப்புக்கள் மற்றும் மூலதனம்) ரூபா 362,799 மில்லியன் ஆகும், இது மொத்த சொத்துக்களில் 13.70 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

| | **2017** | **2018** | **2019** | **2020** | **2021** |
|---|---|---|---|---|---|
| SOEs இற்கு சொந்தமான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 353,279 | 551,110 | 601,297 | 844,821 | 937,386 |
| முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது SOEs மீதியின் அதிகரிப்பு | | 197,821 | 50,197 | 243,525 | 92,564 |
| **முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது SOEs மீதியின் அதிகரிப்பு (%)** | | **56.00** | **9.11** | **40.55** | **10.96** |
| மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 1,074,248 | 1,334,420 | 1,386,481 | 1,723,466 | 1,936,974 |
| **வங்கியின் மொத்த கடன்கள்** | **32.89** | **41.30** | **43.37** | **49.02** | **48.39** |

தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மற்றும் முற்பணங்களில் SOEs கடன் மீதி (%)** | | | | | |
| வங்கியின் மொத்த சொத்துக்கள் | 1,467,099 | 1,734,703 | 1,873,406 | 2,230,119 | 2,647,641 |
| மொத்த சொத்துக்களில் SOEs கடன் மீதி (%) | 24.08 | 31.77 | 32.10 | 37.88 | 35.40 |
| அரசாங்கத்திடமிருந்து முதலீடு மற்றும் ஏனைய பெறவேண்டியவை | 278,676 | 328,158 | 419,217 | 435,343 | 672,155 |
| **SOEs இன் மொத்த சொத்து வெளிப்பாடு** | **631,954** | **879,257** | **1,020,514** | **1,280,164** | **1,609,540** |
| மொத்த சொத்துக்களில் SOE வெளிப்பாடு (%) | 43.08 | 50.69 | 54.47 | 57.40 | 60.79 |
| **SOEs இற்கு செலுத்த வேண்டிய மொத்த தொகை (கடன்கள் மற்றும் வைப்புக்கள்)** | **182,559** | **271,085** | **217,791** | **222,257** | **226,722** |
| **மூலதனம்** | | | | | **136,077** |

| | | | |
|---|---|---|---|
| 3.4.7 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 SOEs இன் கடன்கள் ரூபா 873,689 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 9,152 மில்லியன் வட்டியுடன் ரூபா 882,840 மில்லியனாக பதிவு செய்யப்பட்டிருந்தது. இது SOEs இற்கு சொந்தமான மொத்த நிலுவை கடன்கள் மற்றும் முற்பணங்களின் மீதியில் 94.18 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முதல் பத்து SOEs கடன்களின் விபரங்கள் பின்வருமாறுள்ளன, | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது. வங்கி SOE வெளிப்பாடுகளுக்கு வரம்புகளை நிர்ணயித்துள்ளதுடன் 2023 இல் SOE | சரியான வரம்புகளைப் பேணுவதன் மூலம் SOEs இன் கடன் மீதிகள் தொடர்பாக பின்தொடர் |

| நிறுவனம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை<br>ரூபா. மில்லியன் | பிணை | பிணை பெறுமதி | வெளிப்பாட்டைக் படிப்படியாக குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கிறது. | நடவடிக்கை அவசியம். |
|---|---|---|---|---|---|
| திறைசேரி பிரதிச் செயலாளர் | 373,918 | பிணையற்றது (Clean) | - | DST வெளிப்பாடு தொடர்பாக பின்வரும் விடயங்களை முன்னிலைப்படுத்த விரும்புகிறேன்.<br>➢ DST கணக்கு 2021.12.31 இல் உள்ளவாறு ரூபா 373.918 பில்லியன் மேலதிகப்பற்று வரம்பை அங்கீகரித்துள்ளது. எனினும், தற்போது ரூபா 30.0 பில்லியன் வரை குறைக்கப்பட்டுள்ளது. 2022.09.02 ஆம் திகதிய PB/CEO/GM/RK/HOF கடிதத்தின் பிரகாரம் 2022.09.30 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ரூபா 15.0 பில்லியன் வரை மேலதிகப்பற்று மீதியை மேலும் குறைக்குமாறு வங்கி கோரியுள்ளது.<br>➢ எவ்வாறாயினும், TOD/FOA/01/PB/GEN தொடர்பு | |
| இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் | 233,395 | திறைசேரி இழப்பீடு | ஐ.அ.டொலர் 1,657 மில். | | |
| இலங்கை மின்சார சபை | 70,004 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 20,350.08 மில். | | |
| | | பெறவேண்டியவைக்கு மேற்பட்ட ஈடு | ரூபா 38,800 மில். | | |
| | | பிணையற்றது (ரூபா 29,835 மில்லியன்) | - | | |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 65,803 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 35,000 மில். | | |
| | | | ஐ.அ.டொலர் 44.7 மில். | | |
| | | திறைசேரி இழப்பீடு | ரூபா 8,380.09 மில். | | |
| | | பொது திறைசேரியிலிருந்து உறுதிமொழி கடிதம் | ரூபா 12,892.87 மில். | | |
| | | பண வைப்பு ஒதுக்கீடு | ரூபா 1.07 பில். | | |
| ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் | 43,252 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 13,901.84 மில். | | |
| | | | ஐ.அ.டொலர் 12.89 மில். | | |
| | | பொது திறைசேரியிலிருந்து வசதிக் கடிதம் | ரூபா 13,901.84 மில். | | |
| | | | ஐ.அ.டொலர் 101.87 மில். | | |
| சிலோன் பேர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட் | 27,052 | பொது திறைசேரியிலிருந்து வசதிக் கடிதம் | ரூபா 27,147.05 மில். | | |
| | | நிலையான வைப்பு | ரூபா 1,393.8 மில். | | |
| பணிப்பாளர் ஓய்வூதியம் | 23,463 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 32,467 மில். | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கொழும்பு கொமர்ஷல் போர்ட்டிலைசர் லிமிட்டட் | 16,978 | பொது திறைசேரியிலிருந்து வசதிக் கடிதம் | ரூபா 10,325.75 மில்.<br>ஐ.அ.டொலர் 40.28 மில். | இலக்கத்தின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2022.09.30 ஆம் திகதிய கடிதத்தின் பிரகாரம் திறைசேரி செயலாளர் (பதில்) தற்போதுள்ள ரூபா 30.0 பில்லியன் மேலதிகப்பற்று வரம்பை 2022 திசெம்பர் இறுதி வரை பேணுமாறு கோரியுள்ளார். |
| | | பண ஒதுக்கீடு | ரூபா 122.18 மில். | |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | 14,918 | திறைசேரி உத்தரவாதம் | ரூபா 3,961.03 மில்.<br>யூரோ 7,6 மில். | |
| | | பொது திறைசேரியிலிருந்து உறுதிமொழி கடிதம் | ரூபா 11,295.92 மில். | |
| அரச மருந்தக கூட்டுத்தாபனம் | 14,057 | பொது திறைசேரியிலிருந்து வசதி கடிதம் | ரூபா 6,000 மில். | |
| | | பிணையற்றது (ரூபா 8,000 மில்லியன்) | - | |

| | | | |
|---|---|---|---|
| 3.4.8 | ரூபா 480,526 மில்லியன் தொகையான திறைசேரி பிரதிச் செயலாளரின் நிலுவை மீதிகள், சமுர்த்தி கடன் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்களிற்கு அரசாங்க திறைசேரியிலிருந்து பெறவேண்டிய வட்டி மீதிகள் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காசாக செலுத்தி தீர்ப்பதற்கு பதிலாக திறைசேரி பிணைமுறிகளை வழங்குவதன் மூலம் தீர்க்கப்பட்டன. | குறித்துக் கொள்ளப்பட்டது | காசு மூலம் தீர்ப்பனவு செய்வதில் கவனம் தேவை. |

| | **2020** | **2021** | **மொத்த தீர்ப்பனவு தொகை** |
|---|---|---|---|
| திறைசேரி பிரதி செயலாளர் | 201,611 | 257,000 | 458,611 |
| சமுர்த்தி கடன் | - | 3,582 | 3,582 |
| சிரேஷ்ட பிரஜைகளின் வைப்புக்களிற்காக பெறவேண்டிய வட்டி | 10,956 | 7,376 | 18,332 |
| **மொத்தம்** | | | **480,526** |

| | | | |
|---|---|---|---|
| 3.4.9 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான off balance sheet பெறுமதி (கடன்கள் மற்றும் வங்கி உத்தரவாதங்கள்) ரூபா 120,663 மில்லியனாக இருந்ததுடன் மேற்கூறிய off balance sheet பெறுமதி உட்பட SOE வெளிப்பாடு ரூபா 1,730,203 மில்லியனாக இருந்ததுடன் இது வங்கியின் மொத்த சொத்துக்களில் 65.35 % ஆகும். மேலும் ரூபா. 93,378 மில்லியன் அல்லது 77.39% off balance sheet பெறுமதிகள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திறக்கப்பட்ட நாணயக் கடிதத்தை (LC) பிரதிநிதித்துவப்படுத்தியது. | கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது.<br>வங்கியின் கடுமையான ஐ.அ.டொலர் நிலைமை காரணமாக, CPC இற்கு புதிய நாணயக் கடிதத்தை (LC) | சரியான வரம்புகளைப் பேணுவதன் மூலம் SOEs இன் வரம்புகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் அவசியம். |

| | | | |
|---|---|---|---|
| | | நாங்கள் ஏற்படுத்தியிருக்கவில்லை, எனவே 2022.11.17 இல் உள்ளவாறு LC o/s காணப்படவில்லை. எனினும் தீர்க்கப்படாத பயன்பாட்டு உண்டியல் (Usance Bill value) பெறுமதி ரூபா 74.74 பில்லியன் CPC இன் off-balance உருப்படியாக உள்ளது. | |
| 3.4.10 | ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைகின்ற போதிலும் 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்க டொலரை கொள்வனவு செய்வதற்காக வங்கி பல ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா இடமாற்று உடன்படிக்கைகளை பின்வரும் அட்டவணையின் பிரகாரம் மேற்கொண்டுள்ளது. மேலும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஐ.அ.டொலரின் கொள்வனவு விலைவிகிதத்தை விட ஐ.அ.டொலரின் விற்பனை விலைவிகிதம் குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இதனால் 2021 ஆம் ஆண்டில் அந்த இடமாற்று உடன்படிக்கைகள் தொடர்பாக வங்கிக்கு ரூபா 4,063,085,606 (எதிர்கால முதிர்ச்சியின் (far leg/maturity) போது உண்மையான விலைவிகிதத்தை சீர்செய்யாமல்) நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. | பின்வரும் காரணிகளின் காரணமாக ஐ.அ.டொலர் நிதியை உருவாக்குவதற்கு வங்கி ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா இடமாற்று கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.<br><br>2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாடு அனுபவித்த தொடர்ச்சியான குறைவான நாணயமாற்றுவீத மதிப்பீடுகளின் விளைவாக, வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், மக்கள் வங்கி உட்பட எந்தவொரு இலங்கை வங்கிகளுக்கும் ஐ.அ.டொலர் வசதிகளை வழங்குவதைத் | புதிய LCs ஐ திறக்கும்போது அந்நியச் செலாவணி நிலைமை பற்றி அதிக கவனம் தேவை. |

ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா (கொள்வனவு) இடமாற்றங்கள் 2021

| **முதலாம் காலாண்டு ஐ.அ.டொலர்** | **இரண்டாம் காலாண்டு ஐ.அ.டொலர்** | **மூன்றாம் காலாண்டு ஐ.அ.டொலர்** | **நான்காம் காலாண்டு ஐ.அ.டொலர்** | **மொத்தம் ஐ.அ.டொலர்** |
|---|---|---|---|---|
| 776,210,000 | 616,750,000 | 281,255,036 | 634,440,814 | 2,308,655,850 |

தவிர்த்துவிட்டன. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எமது ஐ.அ.டொலர் கடன்கள் ஐ.அ.டொலர் 857.2 மில்லியன் தொகையாகும். எனினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த தொகை ஐ.அ.டொலர் 481.75 மில்லியன் மாத்திரமேயாகும்.

மேலும், CPC இற்கான புதிய LC's திறக்கப்பட்டதாலும், வங்கிகளுக்கு இடையேயான FX சந்தையில் இருந்து ஐ.அ.டொலர்களை கொள்வனவு செய்ய இயலாமையின் காரணமாகவும், CPC இன் ஐ.அ.டொலர் கடன் நிலுவைத் தொகையைத் தீர்ப்பனவு செய்வதற்கு இந்த ஐ.அ.டொலர்களைப் பயன்படுத்த முடியாததாலும், CPC இன் ஐ.அ.டொலர் கடன் நிலுவைத் தொகை 2021 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 76.3 மில்லியனால் அதிகரித்தது.

ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா இடமாற்ற கொடுக்கல்வாங்கல்களில் நுழைந்து ஐ.அ.டொலர்

கடப்பாடுகளை செலுத்துவதற்கு அந்த ஐ.அ.டொலர் நிதியைப் பயன்படுத்துவதே அதன் ஐ.அ.டொலர் பணப்புழக்கப் பற்றாக்குறைக்கு நிதியளிப்பதற்கு வங்கிக்கு இருக்கும் ஒரே வழியாகும். வங்கி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை என்றால், 2020/21 ஆம் ஆண்டிலேயே வங்கி அதன் ஐ.அ.டொலர் கடப்பாடுகளை செலுத்தத் தவறியிருக்கும்.

பல சந்தர்ப்பங்களில் ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா இடமாற்ற கொடுக்கல்வாங்கல்களின் FX நட்டங்கள் குறித்து ALCO மற்றும் பணிப்பாளர் சபைக்கு தெரிவிப்பதற்கு திறைசேரி பிரிவு நடவடிக்கை எடுத்தது. ALCO இன் ஆலோசனையின் பிரகாரம் CPC இன் ஐ.அ.டொலர் தேவைப்பாட்டிற்கு நிதியளிப்பதற்கு வங்கி ஐ.அ.டொலர்/இலங்கை ரூபா இடமாற்றத்தில் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமாக,

| | | | |
|---|---|---|---|
| | | 2021 மே 21 முதல் CPC இடமிருந்து இடமாற்ற கிரயத்தின் ஒரு பகுதியை அறவிடுவதற்கு எமது கூட்டுத்தாபன வங்கிப் பிரிவு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. | |
| 3.4.11 | இந்த ஐ.அ.டொலர் இடமாற்ற கொள்வனவுகள் முக்கியமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் LCs ஐ தீர்த்துவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டில் CPC சார்பாக வங்கி ஐ.அ.டொலர் 1,054,265,967 மற்றும் யூரோ 139,736 தொகையான LCs ஐ திறந்திருந்தது. வங்கியானது ALCO அங்கீகரித்த தேறிய FX நிலை வரம்பை (ஐ.அ.டொலர் 25 மில்லியன் நீண்ட அல்லது குறுகிய) பல நிகழ்வுகளில் தாண்டியுள்ளதுடன் தேறிய FX நிலை பெரும்பாலும் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் குறுகியதாக இருந்தது. | 2021 இல் ALCO அங்கீகரித்த தேறிய FX நிலை வரம்பை வங்கி மீறியிருக்கவில்லை.<br><br>வங்கி எதிர்கொண்ட கடுமையான FX நிலையின் விளைவாக, 2021.09.28, 2021.10.30 மற்றும் 2021.11.22 ஆகிய மூன்று சந்தர்ப்பங்களில் தேறிய திறத்தல் நிலை (NOP) எதிர்மறை வரம்பை மேம்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியின் (CBSL) அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கி நடவடிக்கை எடுத்து CBSL இன் அங்கீகாரத்தை பெற்றது. மேலும், மேற்கூறிய தேறிய திறத்தல் நிலை எதிர்மறை வரம்பு மேம்பாடுகளுக்கு ALCO இன் அங்கீகாரத்தை நாங்கள் பெற்றுள்ளோம். | தேறிய திறத்தல் நிலை வரம்புகளை கடைபிடிக்க வேண்டும். |
| 3.4.12 | <u>ரன்டியா டிஸ்ரில்லரீஸ் பிறைவேட் லிமிட்டட்</u> | 2020.08.04 இல் | அறவீடுகள் |

| | | |
|---|---|---|
| கம்பனி மதுபானம் தயாரித்து போத்தலில் இடும் தொழிலில் ஈடுபட்டுள்ளது. கம்பனி ஆரம்பத்தில் 1982 இல் ”ரியோ மார்க்கெட்டிங் சேர்வீசஸ் பிறைவேட் லிமிட்டட்” என்ற பெயரில் கூட்டிணைக்கப்பட்டது, பின்னர் அதன் பெயர் ”ரன்டியா டிஸ்ரில்லரீஸ் பிறைவேட் லிமிட்டட்” என மாற்றப்பட்டிருந்தது. இந்த வாடிக்கையாளர் வங்கிக்கு புதியவராக உள்ளதுடன் அவரது நடைமுறைக் கணக்கு 2020.05.06 இல் திறக்கப்பட்டது. வங்கி ரூபா 250 மில்லியன் வசதியை வழங்கியுள்ளது. வங்கியின் கடன் நடைமுறை கையேட்டின் (CPM) தலைப்பு 05 இன் 6.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபன உத்தரவாதங்கள் மற்றும்/அல்லது ஏனைய அசையும் பொருட்கள் உட்பட உத்தரவாததாரர்களின் பிணை மீது கருத்தில் கொள்ளப்பட்ட காலக் கடன்கள் குறிப்பாக குறித்துரைக்கப்பட்டால் தவிர 3 ஆண்டுகளுக்கு வரையறுக்கப்பட வேண்டும். எனினும், சபை நிறைவேற்றுக் கடன் குழுவின் (BECC) அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு பணிப்பாளர்களின் பிணைக்கு எதிராக இந்த வசதி வழங்கப்பட்ட போதிலும் மேற்கூறிய வசதி 05 ஆண்டுகளிற்கு கருத்தில் கொள்ளப்பட்டது, மேலும், கடன் நடைமுறை கையேட்டின் தலைப்பு 05 இன் 9.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு தனியாள்/ கூட்டுத்தாபன நிறுவனத்தின் உத்தரவாதமானது அவர்/அவள் வங்கியில் செயற்பாடற்ற ஒருவராக/ வங்கி அல்லது வேறு ஏதேனும் நிதி நிறுவனத்தில் கடந்த கால கடன் வாங்கியவர்/உத்தரவாததாரராகத் தோன்றினால் அத்தகைய உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளப்படாது. எவ்வாறாயினும், மேற்கூறிய உத்தரவாததாரர்கள் இந்த வசதியை வழங்குவதற்கு முன்பு CRIB இல் நேரடியாகவும் மறைமுகமாகவும் செயற்பாடற்ற பதிவுகளை வைத்திருந்தனர் என்பது கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது, | அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய BECC பத்திரத்தில் (683/2020) விலகல்கள் முன்னிலைப்படுத்தப்பட்டு, காசுப்பாய்ச்சல் அடிப்படையில் கருத்தில் கொள்ளப்பட்டது. இந்த வசதி 2021.08.31 இல் அல்லது அன்றைய திகதியில் மீளப்பட்டியலிடப்பட்டது, அதன் பின்னர் கம்பனி மாதாந்த தவணைப்பணங்களை அறவிடுவதற்கு ரூபா 30.5 மில்லியன் தொகையை ஒழுங்கற்ற முறையில் தவணைப் பணங்களாக செலுத்தியுள்ளது. பலமுறை நினைவூட்டப்பட்ட போதிலும் தொடர்ச்சியான ஒழுங்கற்ற மீள்கொடுப்பனவின் விளைவாக, கடன் வாங்கிய கம்பனி மற்றும் பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதத்திற்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு வங்கி தீர்மானித்துள்ளது. வழக்கு நடைபெறும் அடுத்த விசாரணை திகதி 25.11.2022 இல் ஆகும். | தொடர்பாக தொடர்ச்சியான பின்தொடர் நடவடிக்கைகள் அவசியமாக உள்ளதுடன் குறிப்பிடப்பட்ட வழிகாட்டல்கள் கடைப்பிடிக்கப்படுதல் அவசியமாகும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவ கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- |
| | | |

| விபரம் | மக்கள் வங்கி | இலங்கை வங்கி | கொமர்ஷல் வங்கி | சம்பத் வங்கி | ஹற்றன் நஷனல் வங்கி |
| --- | --- | --- | --- | --- | --- |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 7568 | 8337 | 5072 | 4013 | 5024 |
| கிளைகளின் எண்ணிக்கை | 742 | 581 | 287 | 229 | 255 |
| ஊழியர் ஒருவரிற்கான கிரயம் (ரூபா. மில்.) | 3.01 | 3.00 | 3.22 | 2.38 | 2.14 |
| ஊழியர் ஒருவரிற்கான இலாபம் (ரூபா. மில்.) | 3.13 | 4.51 | 4.65 | 3.10 | 9.35 |
| தேறிய செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக ஆளணி செலவினங்கள் | 29.46 | 26.61 | 24.47 | 23.05 | 22.91 |

- ஒரு வருடத்திற்கு ஒரு ஊழியருக்கு வங்கி ரூபா 3.01 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் 2021 ஆம் ஆண்டில் ஒரு ஊழியருக்கு ஈட்டப்பட்ட இலாபம் ரூபா 3.13 மில்லியனாக மாத்திரமே இருந்தது. எனினும், ஏனைய வங்கிகள் ஒரு ஊழியருக்கு ரூபா 3.1 மில்லியன் முதல் ரூபா 4.65 மில்லியன் வரையான இலாபத்தை அறிக்கையிட்டுள்ளன.

- 2021 ஆம் ஆண்டிற்கான வங்கியின் தேறிய செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமாக ஆளணி செலவினங்கள் 29.46 சதவீதமாக இருந்தது, இது 22.91 சதவீதத்திலிருந்து 26.61 சதவீதம் வரையான வீச்சில் அறிக்கையிட்ட ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடும் போது அதிக பெறுமதியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**முகாமைத்துவ கருத்துரை:** கருத்துரைகள் குறித்துக் கொள்ளப்பட்டது.

**பரிந்துரை:** ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் போது வங்கி நிதியை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் அவசியம்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 மூலோபாயத் திட்டம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபை அங்கீகரித்த 2021-2023 ஆண்டுக்கான மூலோபாயத் திட்டம் காணப்படவில்லை.<br><br>ஆரம்பத்தில் 2021-2023 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு வங்கி திட்டமிட்டிருந்த போதிலும், ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்கான பெறுகை செயன்முறை கணிசமாக தாமதமானதால், 2021 ஆம் ஆண்டிற்கான ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை நீடிக்கப்பட்டது. அதனுடன் மேவுகை காலப்பகுதி மாறியுள்ளது. | 2021-2024 காலப்பகுதிக்கான சபை அங்கீகரித்த மூலோபாய திட்டங்கள் தங்கள் பார்வைக்கு தயாராக உள்ளது. | கூட்டிணைந்த திட்டத்தை சரியான நேரத்தில் தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |